[திரு. வை. சிவபுண்ணியம்] [2008 ஏப்ரல் 22

அடிப்படையாகக் கருதுவது என்னவென்றால், பஞ்சாயத்து ராஜ் திட்டம் என்பதே, மாநில அளவில் இருக்கின்ற கிராமங்களைச் சென்றடைய வேண்டுமென்று இருக்கின்றது. ஆனால், அந்தப் பஞ்சாயத்து ராஜ் திட்டத்தை மத்திய அமைச்சரே வைத்துக்கொள்வதற்கான முயற்சி எடுப்பது என்பதை நேர்முரண்பாடான கருத்தாக நாங்கள் கருதுகின்றோம். இந்த முறையை மத்திய அமைச்சகம் செய்வது என்பது எந்த வகையிலும் பொருத்தமாக இல்லை என்பதுதான் எங்களுடைய கருத்தாகும். தமிழ்நாடு அரசு மேற்கொண்டிருக்கின்ற இந்த முடிவு பொருத்தமான, சரியான முடிவு. இதை ஒழுங்காக, சரியாக நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய அமைச்சகம் உரிய முறையில் கவனம் செலுத்தவேண்டும். நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் அறிவித்திருக்கின்ற செய்தி நமக்கு ஆறுதல் அளிக்கின்றது. அதை உரிய வகையில், சட்ட ரீதியாக நிறைவேற்ற வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் இந்த அவையில் வலியுறுத்துகின்றேன். நமது அரசும் இதை வலியுறுத்தவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள் இங்கே பேசும்போது ஒரு கேள்வியைக் கேட்டார்கள். வரைவு சாசனம் தயாரித்த நேரத்தில், மாநில அரசின் சார்பில் ஏதாவது குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டனவா என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். நிச்சயமாக, நம்முடைய மாநில அரசின் சார்பில் எந்தப் பிரதிநிதியும் இது சம்பந்தமாக அனுப்பி வைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

(ஆ) மதுரை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலையை அவமரியாதை செய்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) அது என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. நீங்கள் எல்லோரும் கொடுத்திருக்கின்றீர்கள். நாளைக்கு அதுபற்றி முடிவு சொல்வேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் கொடுத்திருக்கின்றீர்கள்; நான் பார்த்தேன். (குறுக்கீடுகள்) சரி,* mention *பண்ணுங்கள். (குறுக்கீடுகள்)* mention *பண்ணுங்கள்; நாளை பதில் வந்த பிறகு எடுத்துக்கொள்ளலாம்.*

2008 ஏப்ரல் 22] [பேரவைத் தலைவர்]

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன். (குறுக்கீடு) வரட்டுமே! அதற்கு என்ன இப்போது?

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரிலே நேற்றையதினம் நடைபெற்ற ஒரு அசாதாரணமான நிகழ்ச்சியை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். பாரதப் பெருந்தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களும், மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும், மறைந்த தேசியத் தலைவர் முத்துராமலிங்கத் தேவர்மீதும், முக்குலத்தோர் சமூகத்தின்மீதும் மிகுந்த பற்றும், மரியாதையும் வைத்திருப்பதை முக்குலத்தோர் சமூக மக்கள் மிக நன்கு அறிவார்கள். மத்திய அரசும், மாநில அரசும் மக்கள் நலத் திட்டங்களை வேகமாகச் செயல்படுத்தி வருவதை, மக்களின் நம்பிக்கையைப் பெற்று வருவதைப் பொறுக்கமுடியாத சில விஷக் கிருமிகள், தேசியத் தலைவர், பசும்பொன் தேவர் திருமகனார் சிலையை அவமானப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, சாதியக் கலவரம் உருவாக்க வேண்டுமென்ற சிந்தனையோடு இத்தகைய தீய செயலை இழைத்திருக்கின்றார்கள். இவ்வாறு தவறான செயல்களில் ஈடுபடும் நபர்களை அரசு விரைந்து கைது செய்து, எதிர்காலத்தில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ராஜேந்திரன், நீங்கள் சொன்ன விவரங்கள்பற்றி எல்லாக் கட்சிகளிலும் கொடுத்திருக்கின்றார்கள். அதுபற்றிய அறிக்கை அரசுக்கு வரவேண்டும். அதற்குப் பிறகு நாளை எடுத்துக்கொள்ளப்படும், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, நீங்கள் சொன்ன விவரத்தைப் புரிந்துகொண்டேன். எல்லாக் கட்சிகளின் சார்பாகவும் கொடுத்திருக்கின்றார்கள், ஆளும் கட்சி சார்பாகவும் கொடுத்திருக்கின்றார்கள், எதிர்க்கட்சி சார்பாகவும் கொடுத்திருக்கின்றார்கள். இதுபற்றிய அறிக்கை அரசுக்கு வந்தவுடன் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும், உட்காருங்கள்.

முற்பகல் 11-45

5. கவன ஈர்ப்பு

வேலூர் மாவட்டம், ஜவ்வாது மலை, வனத் துறைப் பள்ளிகளைப் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் கொண்டு வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. தி.க. ராஜா அவர்கள்